Hon. Members are requested to participate in the ceremony.

III.—ADJOURNMENT MOTIONS.

(1) ISSUE OF THE GOLD CONTROL RULES.

MR. SPEAKER : I have received notices of adjournment motions under Rule 42 from Messrs. Saw Ganesan, K. A. Mathialagan, A. P. Dharmalingam, V. Krishnamoorthy, M. S. Mani. T. P. Alagamuthu, M. Shanmugam and A. Thangavelu and others to discuss a matter of urgent public importance, viz., the issue of the Gold Control Rules and the consequent unemployment of the workers engaged in the trade. On this matter notices under Rule 41 have also been received from some hon. Members.

* திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஒத்திவைப்பு தீர்மானத்தை பிரேரேபிப்பதற்குக் காரணம் கடந்த 10-ம் தேதி அன்று தம்முடைய இந்திய நிதியமைச்சர் தங்கக் கட்டுப்பாடு உத்தரவுகளை பிரகடனப்படுத்தியதற்கு ஆட்சேபமாகவோ அல்லது அவர்களுடைய நோக்கங்களிலிருந்து வேறுபடுகிற விவகாரத்தின் முயற்சியிலோ அல்ல. அதன் அடிப்படைக் கொள்கைகளில், அன்னியச் செலாவணிக்காக நமது தங்க இருப்புகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதிலும், வெளி நாடுகளில் இருந்து கள்ளக் கடத்தல் மூலம் கோடிக்கணக்கான ரூபாய் அளவில் தங்கம் கொண்டு வரப்படுவதைத் தடுக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கங்களில் இரண்டு வித அபிப்பிராயம் யாருக்கும் இருக்க முடியாது. அதுவும் தேசீய நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்தப் பெரும் சந்தர்ப்பத்தில், இந்தப் பெரும் முயற்சியில் இவ்வளவு முற்போக்கான ஒரு கருத்தை, நல்ல முயற்சிக்காக, பல காலமாக செய்யப்படாத ஒரு காரியத்தை, இந்த உத்தரவுகளை, கேட்ட நேரத்தில் எங்கள் உள்ளம் உண்மையிலேயே புல்லரித்தது. ஆனால் இந்தப் பிரகடனத்தின் விளைவாக . . . .

MR. SPEAKER : The hon. Member should be very brief and should not prolong his speech.

SRI K. A. MATHIALAGAN : Sir, I am explaining the reason why I have given notice of the adjournment motion . . . . இது வரவேற்கத் தக்க ஒரு பெரிய அம்சம் என்றாலும் இப்பிரகடனத்தின் விளைவாக தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இந்த ஆபரணத் தொழிலில் ஈடுபட்டுள்ள லட்சக்கணக்கான பேர்கள் இன்று வேலையிழந்து பயங்கரமான ஒரு சூழ்நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். நேற்றையதினம் எதிர்கட்சி அங்கத்தினர்கள் என்று இல்லாமல் சர்க்கார் கட்சியைச் சார்ந்தவர்கள்கூட—திரு. சங்கரன், திருமதி குழந்தையம்மாள் போன்றவர்கள் எல்லாம்—இதுபற்றி விளக்கினார்கள். இது அவசரப் பிரச்னை கூட மட்டும் அல்ல. இன்று திருச்சிராப்பள்ளி, கோவை, மதுரை, கும்பகோணம்

30th January 1963] [திரு. கே. ஏ மதியழகன்]

போன்ற இடங்களில் எல்லாம் லட்சக்கணக்கான தொழிலாளர்கள், 14 காரட்டில்தான் நகைகள் செய்ய வேண்டுமென்றிருக்கிற விதி முறை காரணமாக பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 14 காரட்டில் ஏன் செய்ய வேண்டுமென்பதைப்பற்றி 5,000 ஆபரணத் தொழிலாளர்கள் இந்திய நிதியமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் நமது நகரத்தில் சர்க்கார் விருந்தினர் மாளிகையில் இருந்தபோது அவர்களை சந்தித்து கேட்டபோது அவர்கள் ஒரு பதில் சொன்னார்கள் . . .

Mr. SPEAKER : The hon. Member should explain some salient points for giving notice of the adjournment motion.

* திரு. கே. ஏ. மதியழகன் : 14 காரட்டில் நகைகளை செய்யும் விவகாரம்பற்றி, வட இந்திய சகோதரர்களைப் போல் ஏன் செய்யக் கூடாது என்று கேட்டார்கள். இது அங்கே சாத்தியமாக இருக்கிறது என்ற நிலை இருந்தாலும் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் 22 காரெட் நகைகளில் தான் பழக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் இப்படி மாற்றுவதால் பெரும் பாதிப்பு இன்று ஏற் பட்டிருக்கிறது. இந்த பாதிப்புக்கு மாற்று வாய்ப்புகள் தர வேண்டும் என்பது மட்டுமல்ல. ராயப்பேட்டை காங்கிரஸ் மாளி கையில் நமது முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து திருச்சியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இதுபற்றி அவர் களிடம் விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். நான் இத்தீர் மானத்தை வற்புறுத்திச் சொல்லக் காரணம், இதைத் தளர்த்த வேண்டிய அவசியமும், இந்த 14 காரட் என்பதை மாற்ற வேண்டிய அவசியமும் நிச்சயமாக வந்திருக்கிறது. இன்று லட்சக்கணக்கானவர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றவர்களுக்கு வேண்டுமானால் இது நடைமுறைக்கு உகந்ததாக யிருக்கலாம். 14 காரட் என்ற முறை இங்கு அனுசரிக்கப்பட்ட தல்ல. குஜராத் பகுதியில் உள்ள ராஜ்கோட் போன்ற இடங்களி லும், பவநகர் போன்ற இடங்களிலும் 14 காரட்டில் நகைகள் செய் கிறார்கள். அங்கு இருப்பதை வைத்துக் கொண்டு 14 காரட் என் பதை நடைமுறைப்படுத்துகிறார்கள் என்றால் அது தவறு. இங்கு 18, 20 காரட் என்று இருக்க வேண்டும். மத்திய கிழக்கு . . .

Mr. SPEAKER : The hon. Member should explain the unemployment problems caused by the Gold Control Rules and ask what the Government are going to do to solve the unemployment problem.

Sri K. A. MATHIALAGAN rose—

Mr. SPEAKER : The hon. Member should resume his seat when the Chair is on its legs. If the Member wants me to allow it, he should explain how it is an urgent matter. Supppose the motion is allowed. What is it that the hon. Member is going to say more than what he has already said? He cannot go into the matter in detail now.

[30th January 1963

* திரு. கே. ஏ. மதியழகன் : இன்று வேலையில்லாதிருக்கும் பெரும் படையில் இந்த லட்சக்கணக்கான தொழிலாளர்களையும் விழ்த்தாமல் அவர்களுக்கு வேறு வேலை வாய்ப்புகள் அளிக்கவும், அவர்களுக்கு வேண்டிய பரிகாரம் தேடவும் இச்சர்க்கார் முயல வேண்டும் என்பதற்காக இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை முன் மொழிய வேண்டியிருக்கிறதென்று வற்புறுத்திச் சொல்லுகிறேன்.

* திரு. சா. கணேசன் : கனம் சபாநாயகர் அவர்களே, தங்கக் கட்டுப்பாட்டு விதியின் காரணமாகக் கொண்டுவரப்படும் இத்தீர் மானம் மிகவும் இன்றியமையாதது என்பது அரசாங்கத்திற்கு ஓரளவு நன்றாகத் தெரிந்திருக்கும். இந்த தேசத்திலே முக்கிய மான ஒரு தொழில் வர்க்கமாகிய பொற்கொல்லர்கள் இன்று மிக வும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறைந்தபட்சம் பத்து லட்சம் பேர்களாவது தமிழ் நாட்டில் இதனால் பாதிக்கப்பட்டிருக்க வேண் டும். ஜனக் கணிதி நமக்கு அதைப் புலப்படுத்தும். தேசம் முழுதும் பார்த்தால் குறைந்தபட்சம் ஒரு கோடிப் பேர்கள் வேலையே இல்லாதவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த நேரத்தில் நாம் இதைப் பரிசீலனை செய்யும்போது வேலை வாய்ப்புக்களை இழந்து திண்டாடுகிறவர்களுக்கு என்ன மாற்று வேலைகளைக் கொடுப்பது, அல்லது என்ன நிவாரண முறைகளைக் கையாள்வது என்பதைப் பற்றி ஆலோசிக்க வேண்டுவது மக்களின் பிரதிநிதிகளாகிய நமது இன்றியமையாக் கடமை என்பதைச் சபை ஏற்றுக்கொள்ளும். ஆகவே இதை விரிவாக விவாதித்துத் தக்க பரிகாரம் காண எல்லா அங்கத்தினர்களும், சிறப்பாக அர சாங்கமும், இதை ஏற்று இதைப் பற்றி விவாதிப்பதற்குரிய சூழ் நிலையையும் அவசியத்தையும் ஏற்படுத்துவார்கள் என்று நம்பி, இத்தீர்மானம் மிக இன்றியமையாதது, இதைக் கொண்டு வர சபா நாயகர் அவர்கள் அனுமதிக்க வேண்டும், என்று நான் வேண்டி அமருகிறேன்.

* கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர் களே, இப்பிரச்னை அவசரப் பிரேரணைக்கு உகந்ததல்ல என்றுதான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முதலில் இதைப் பிரே ரேபித்த கனம் அங்கத்தினர் அவர்கள், இப்பிரேரணையை தாங்கள் அனுமதித்து அதற்கு மேல் சாங்கோபாங்கமாக எப்படி விவாதம் நடக்குமோ அந்த வகையில் பேசி விட்டார்கள். இதற்கு மேல் விளக்க வேண்டிய அவசியம் இருக்காது என்று நான் நினைக் கிறேன். தாங்கள் என் கருத்தை ஏற்றுக் கொள்வதாகயிருந்து இது அவசரப் பிரேரணைக்கு உகந்ததல்ல என்று சொன்னாலும் கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் திருப்திப்படு வார்கள் என்றுதான் நான் நம்புகிறேன். மற்றவர்கள் பேசக் கூடியதையெல்லாம் கனம் அங்கத்தினர் அவர்கள் பேசி விட்டார்கள். மற்றொன்று, கனம் அங்கத்தினர் அவர்கள் தங்கக் கட்டுப்பாடு உத்தரவை வரவேற்பதாகப் பேசினார்கள். அதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. அவர்கள் தெரிவித்த கருத்தை நான் வரவேற்கிறேன். ஒரு பொது நலனையொட்டி, நாட்டின் பொது நலனை யொட்டி ஒரு கட்டுப்பாடு அவசியம் என்றால் அதை ஆதரிக்க

30th January 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

வேண்டும். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் எவ்வளவோ பிரச்னைகள் வருகின்றன. கூடுமான வரையில் கட்டுப்பாடு கூடாது என்ற வகையில்—உணவுப் பிரச்னை போன்றவைகளில் கட்டுப்பாடுகள் இல்லாமல் நாம் சமாளிக்க வேண்டும் என்ற வகையில்தான்—இந்த அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது என்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். ஆகவே கட்டுப்பாடு அவசியமாகயிருக்கிறபோது கட்டுப்பாடு வேண்டும் என்பதை அங்கத்தினர்கள் ஒப்புககொள்வார்கள். ஆனால், இதனால் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் லட்சக் கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை பாதிக்கபபட்டிருக்கிறது என்று சொல்வது மட்டும் சரியல்ல. இந்தத் தொழில்ல லட்சக் கணக்கில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது உண்மை. எல்லோருக்கும் இந்தக் கவலை ஏறபட்டிருக்கிறது. அதே நேரத்தில் ஏன் இவ்வாறு கட்டுப்பாடு வந்தது என்பதையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இப்போது கனம் அங்கத்தினர் அவர்கள் விளக்கமாக இதைப்பற்றி சொன்னார்கள். பொதுவாக தங்கம் வெளியிடங்களிலிருந்து திருட்டுத்தனமாக வருகிறது. இதனால் அந்நியநாட்டு செலாவணி பாதிக்கப்படுகிறது. இம்மாதிரி திருட்டுத்தனமாக வருவதற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது என்பதற்காகததான் இநத உத்தரவு வந்திருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். இந்த நெருக்கடியான நேரத்தில் இம்மாதிரியான ஒரு உத்தரவு வந்திருந்த போதிலும், இம்மாதிரியான உத்தரவு நம் நாட்டில் மட்டுமலல, மற்ற நாடுகளிலும் இருக்கிறது. கட்டுப்பாடு இருக்கிறது. நகை செய்வதிலும் உத்தரவு இருக்கிறது—கட்டுப்பாடு இருக்கிறது. வடநாட்டில் மட்டுமல்ல, இங்கிலாந்தில் 9 காரட்டில் தான் நகை செய்யவேண்டும் என்று இருக்கிறது. அவ்விதம் நகை செய்து கொண்டிருக்கிறார்கள். வட நாட்டில் இருப்பவர்களுக்கும் நகை ஆசை இருக்கிறது. இங்கிலாந்தில் இருப்பவர்களுக்கும் நகையின் மீது ஆசை இருக்கிறது. அங்கேயும் இம்மாதிரியான கட்டுப்பாடுகள் எல்லாம் இருக்கின்றன. நம்மைப் போல் வடநாட்டிலுள்ளவர்களும் நகை அதிகமாக அணிந்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கின்றோம். ஆகவே நகையில் ஆசையைக் குறைக்க வேண்டும் என்று சொல்லவில்லை. நகையில் ஆசை இருப்பது நல்லதுதான். அதை நான் எதிர்க்கவில்லை. கையில் பணம் வைத்திருப்பதை நகையாகபோட்டுக்கொள்ளலாம் என்ற எண்ணம் இருப்பது இயற்கை. அதற்காக கையிலிருக்கின்ற பணத்தையெல்லாம் கொண்டு தங்கத்தை வாங்கவேண்டுமா என்பதைப்பற்றித்தான் நாம் சிந்திக்கவேண்டும். ஏதோ 20 காரட்டில் தான் நகை செய்வது என்ற பழக்கம் நம்மிடையில் இருந்து வந்துவிட்டது. இம்மாதிரியான பழக்கங்கள் எத்தனையோ நம்மிடத்தில் இருக்கின்றன. பழக்கங்கள் எல்லாம் மாறாமல் அப்படியே இருக்கவேண்டும் என்று சொல்லுவது சரியல்ல. இப்போதுள்ள கட்டுப்பாடு முறைப்படி 14 காரட்டில் நகை செய்ய முடியுமா, முடியாதா என்பதை நாம் பார்க்கவேண்டும். எனது சக (கனம்) அமைச்சர் அவர்கள் கையிலுள்ள பென்சில் இருக்கிறது—அதுவும் தங்கத்தில் செய்தது தான். என்னிடத்தில் பேனா இருக்கிறது, இதிலுள்ள "நிப்"

[திரு. எம். பக்தவத்சலம்] [30th January 1963

14 காரட்டில் செய்யப்பட்டதுதான் உறுதியாக இருக்கிறது. வருஷக்கணக்காக உறுதியாக இருந்து நமக்கு உதவுகிறது. கடிகாரம் இருக்கிறது—என் கையில் இருக்கக்கூடிய ரிஸ்ட் வாட்ச் 14 காரட்டில் செய்யப்பட்டதுதான். ரோல்டு கோல்ட் அல்ல. 1956-ல் ஜெனிவாவில் வாங்கியது. இப்போதும் உறுதியாக இருக்கிறது. எப்போதும் கையில் கட்டிக் கொண்டிருக்கிறேன். இரவு நேரங்களில் தூங்கும் போது கூட கையில் கட்டிக் கொண்டு தான் இருக்கிறேன். இவை எல்லாம் நன்ருகத்தான் இருக்கின்றன. அதல்லாமல் 22 காரட்டில் தான் செய்யவேண்டும் என்றும், அப்படித்தான் சாஸ்திரம் இருக்கிறது என்று சொல்வது, 22 காரட் என்றிருந்தால் தான் நகைகள் பண்ண முடியும் என்று சொல்வது எல்லாம் சரியல்ல. ஆனுல் சில பேர்கள் இந்தச் சந்தர்ப்பத்தை வைத்துக்கொண்டு தொழிலாளர்களிடையே அனுவசியமான பீதியை உண்டாக்குகிறுர்கள். இனிமேல் உங்களுக்குத் தொழில் கிடையாது, கடை வைத்திருப்பவர்களுக்கு எல்லாம் இனிமேல் வியாபாரம் செய்யமுடியாது என்றெல்லாம் பீதியை கிளப்பி விடுகிறுர்கள். இவ்விதம் சொல்வதின் காரணமாக ஏழைத் தொழிலாளர்கள் கவலைப்படுவது இயற்கை. மதுவிலக்கை கொண்டு வந்தபோதும் சில தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் தான் இருந்தது. அதற்காக மதுவிலக்குத் திட்டமே தவறு என்று சொல்லிவிட முடியுமா? இந்த மன்றத்தைப் பொறுத்தவரை அவ்விதம் யாரும் சொல்லமாட்டார்கள் என்பது உறுதி. ஒரு திட்டத்தின் காரணமாக வேலையில்லாமல் போகுமானுல் அதைத் தவிர்ப்பதற்கு வேறு பல வேலைகளை செய்கிறேம். இப்போது தங்கக்கட்டுப்பாடு வந்ததின் காரணமாக நிலைமை சிறிதளவு மோசமாகி இருப்பதை அரசாங்கமும் உணர்ந்துதான் இருக்கிறது. அரசாங்கமும் இதில் கவலை கொள்கிறது. இன்னும் அரசாங்கம் மேற்கொண்டு கவனம் செலுத்தும். ஆனுல் 14 காரட் மூலம் தங்க நகைகளை செய்யவே முடியாது என்று சொல்வது சரியல்ல. இதில் பயிற்சி கொடுப்பதற்கும்—இலவசமாக பயிற்சி கொடுப்பதற்கும்—இதற்காக மான்யங்கள் கொடுப்பதற்கும் அரசாங்கம் தயாராக இருக்கிறது. இப்போது இருக்கின்ற கட்டுப்பாடுகளில் ஏதாவது தளர்த்தவேண்டுமென்ருல் அதை தளர்த்துவதற்கும் தங்கக்கட்டுப்பாடு போர்டார் தயாராக இருக்கிறுர்கள் என்று அறிவித்திருக்கிறுர்கள். இதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். 14 காரட்டில் எவ்வளவோ நகைகளை செய்யலாம் "டைமன்ட்" நகைகள் செய்வதில் சில கஷ்டங்கள் இருப்பதாக முறையிட்டார்கள். அதற்காக சில கலப்புகள் சேர்த்தால் போதும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றியும் ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. கொஞ்ச நாட்களுக்குத்தான் இந்த நிலைமை இருக்கும். இதற்கான ஆராய்ச்சிகள் எல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன. அதன் மூலம் டைமன்ட் நகைகள் எந்த முறையில் செய்ய முடியும் என்பதையும் நாம் பார்க்கலாம். இதில் ஏதாவது கஷ்டங்கள் இருந்தால் வேண்டிய அளவு கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கும் தங்க போர்டார் தயாராக இருக்கிறுர்கள். இவற்றில் எல்லாம் வேண்டிய கவனம் செலுத்தப்படும். இம்மாதிரி 14

30th January 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

காரட்டில் நகை செய்யமுடியாது என்று சொன்னால் அவ்விதம் செய்யமுடியும் என்று அவர்களிடம் நம்பிக்கை ஊட்டி, இம்மாதிரி மாற்றி செய்யலாம் என்ற எண்ணத்தை அவர்களிடம் பரப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இந்தப் பிரச்னை அவசரப் பிரேரணையாக கொண்டுவருவதற்கு உகந்தது அல்ல. இன்னும் கொஞ்சம் இருந்து பார்க்கலாம். நமது பட்ஜெட் விவாதத்தின்போது இன்னும் நிலைமை சீர்திருந்திவிடும். அப்போது யாராவது ரூல் 41-ன் கீழ் விளக்கம் கேட்டால் மேலும் அப்போது இருக்கின்ற நிலைமைகளை விளக்கி அறிக்கை தருகிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் சபாநாயகர்: இப்பிரேரணையைக்கொண்டு வந்த கனம் அங்கத்தினர் அவர்கள் பூர்வாங்கமாக பேசவேண்டியதை எல்லாம் பேசிவிட்டார்கள். இப்போதுள்ள நிலைமையில் இதற்கான விளக்கங்களை கேட்டபின்னால் இப்பிரேரணை அவசரப் பிரேரணையாக அனுமதிக்கப்படுவதற்குத் தகுதியில்லை என்று நான் முடிவு செய்கிறேன்.

(2) ALLEGED INDISCRIMINATE BEATING OF THE PUBLIC BY THE POLICE.

MR. SPEAKER: Notice of another adjournment motion has been given by the hon. Member Sri Sasivarna Thevar.

* திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்: கனம் சபாநாயகர் அவர்களே, சென்ற 17-ம் தேதி மதுரை நகரத்தில் ஒரு பிரஜையை சில போலீஸ்காரர்கள் விசாரணை செய்வதற்கு என்று கைது செய்து போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டுவந்து இருக்கிறார்கள். விசாரணை செய்வதற்கான வழியை எல்லாம் தவறி அவரை பலாத்காரமாக தாக்கியதின் காரணமாக அந்த நபர் போலீஸ் ஸ்டேஷனிலேயே மரணம் அடைந்ததாக நிச்சயமாகத் தெரியவருகிறது. இதைப் பற்றி நான் பூரணமாக விசாரித்ததில் சாதாரண மூன்று போலீஸ் கான்ஸ்டபிள்கள் சேர்ந்துதான் இவ்வாறு தாக்கியிருக்கிறார்கள் என்று தெரிய வந்தது. இதைப்பற்றி நான் 18-ம் தேதி கலெக்டர் அவர்களுக்கு தந்தி மூலம் தெரிவித்தேன். 20 அல்லது 21-ம் தேதி நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களுக்கும் எழுதியிருக்கிறேன்.

கனம் சபாநாயகர்: இம்மாதிரி ஏதாவது நடந்தால் யார் விசாரணை செய்யவேண்டும்? அவ்வாறு யாராவது விசாரணை செய்தார்களா என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிவிக்க முடியுமா?

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்: இதைப்பற்றி R.D.O. விசாரிக்க நியமிக்கப்பட்டிருந்ததாக பின்னால் தெரியவந்தது. இதில் உண்மையான குற்றவாளிகள் யார் என்பதைக் கண்டு பிடித்து, அவர்கள் பேரில் தயவு தாட்சண்யம் இல்லாமல் தண்டிக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் பிரேரணையை கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே இதை அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.